# அறுவைப் பக்கம்

## அட பாவிப் பயலே!



நம்ம பய ஒருத்தன் கொஞ்ச நாளா சரியே இல்லங்க. நல்லா கல கலன்னு சிரிச்சுகிட்டே ஜோக் அடிச்சுகிட்டு பாக்குறவுகளையெல்லாம் கதறக் கதற ஓட்டிகிட்டு சும்மா கோயில் காளை கணக்கா துள்ளிகிட்டு சுத்திகிட்டு இருந்த பய இப்போ எல்லாம் ஏதோ மசக்கை வந்த பொண்ணுகணக்கா மூலையிலே போய் ஒக்கார்ந்துகிட்டு முகம் கொடுத்து பேசாம எங்கினயாச்சும் மூலையிலே போய் பதுங்கிகிட்டு மோட்டுவளைய பார்த்துகிட்டு இருக்குறான்.

‘அட பாவி பயபுள்ள என்ன ஆச்சுடா உனக்கு?’ ன்னு ஒருநாளு பயலுக்கு வேப்பிலை அடிச்சு கேட்டப்போ பய மொகத்துல அப்படி ஒரு வெக்கம்.

‘டேய் நான் கூட சொல்லிகிட்டு இருப்பேன்ல என் ஆபீஸ்ல ரெண்டு பொண்ணுங்க ப்ராஜெக்ட் பண்ணுதுங்கன்னு. அதுல ஒரு பொண்ணு மேல எனக்கு ... என்னான்னு சொல்லத் தெரியலை ஆனா ஒரு மாதிரி பீலிங்’ ன்னு சொல்ல சொல்லவே அப்படியே ட்ரீம் அடிக்கிறான்.

அடப்பாவிப்பயபுள்ள. அதுதானா இதுன்னு நெனச்சுகிட்டு ‘டேய் என்ன இப்படி லேசா சூடம் காட்டிட்டு போய்ட்டா என்ன அர்த்தம்? கொஞ்சம் வெளக்கமா சொல்லு ராசான்னு’ பயலுக்கு லேசா விபூதியடிசு வுட்டு கேட்டேன். இந்த மாதிரி மேட்டரெல்லாம் தான் நமக்கு அல்வா சாப்புடற மாதிரி ஆச்சே.

‘டேய் பாண்டி அந்த பொண்ணுக என் கம்பெனியிலே ப்ராஜெக்ட் பண்ண வந்துதுங்க அதுகளுக்கு நானும் இன்னொரு பையனும் தான் ‘கைட்’ பண்ணறோம். ரெண்டுமே என்கிட்ட நல்லாதான் பேசுது. நான் எதைய சொன்னாலும் பெரிய ஜோக் கேட்ட கணக்கா வுழுந்து வுழுந்து சிரிக்குதுக. அப்படி சிரிக்குறப்போ அவ ஒரு பார்வை பார்ப்பா பாரு அதைப் பார்த்து நான் வுழுந்துடேண்டா ’ பயலுக்கு சும்மா காதல் பீலிங் ரெண்டு காலுலையும் சலங்கையக் கட்டிகிட்டு கன்னாபின்னான்னு ஆடுறது தெரியுது.

‘சரி சரி அதான் ரெண்டு பேர் அதுகளுக்கு சொல்லி கொடுக்கறீங்களே உன்னையதான் பார்க்குதுன்னு எப்படிடா சொல்லுறே?’ ன்னு கேட்டதுக்கு

‘அட மாப்ளே அவன் சரியான சொம்புடா ! வாயே தொறக்க மாட்டான் என்னமோ இவந்தான் பில்கேட்ஸுக்கே கோடிங் குரு மாதிரி எப்பபாரு கோடிங் தான்.எப்ப அதுக கிட்ட பேசுனாலும் சப்ஜெக்ட்டு மட்டும் தான். அவனை வுடுடா. என்னைய மாதிரியே அவளுக்கு இப்படி பீலிங்ஸ் வந்து இருக்கான்னு எப்படியாச்சும் கண்டுபிடிக்கிறேன்னு பய கட்டபொம்மு கணக்கா டயலாக் வுட்டுட்டு கௌம்பிட்டான் !

பய அதுக்கபுறம் பாக்கணுமே ! டெய்லி ஆபீஸுக்கு பேஷன் பேரேட் தான். வாயிலே விசில்தான். பய கால் தரையிலயே படரது இல்லை.

‘ஏண்டா இந்த ஞாயித்துக்கெழமை லஞ்சுக்கு ஏதாச்சும் பஃபே போலாமா?’ ன்னு கேட்டா ‘சாரி மாப்ளே என் ப்ராஜெக்ட் மேட்ஸோட லஞ்சுக்கு அப்பாய்ண்மெண்ட் பிக்ஸ் ஆய்டுச்சு கோச்சுகாதடா’ ன்னு சொல்லிட்டு பிளிறிகிட்டு ஓடுறான். அடப்பாவி இப்படி ஒருத்திக்காக இருக்கறவனுகளை எல்லாம் அத்துவுட்டுட்டு போறியேடான்னு நெனச்சாலும் சரி நம்ம பய எஞ்ஜாய் பண்ணட்டும் மனசு என்னவோ வாழ்த்திகிட்டு தான் இருந்துச்சு. ஒரு பயலோட மனசு இன்னோரு பயலுக்குதானே தெரியும்?

இப்படியே பயலோட வண்டி டாப் கியர்ல ஒரு ரெண்டு மாசத்துக்கு ஓடிகிட்டு இருந்துச்சு. ஒரு ரெண்டு நாளா பயகிட்டே இருந்து மூச்சு பேச்சையே காணோம்.

‘என்னடா கண்ணா சும்மா கொம்பு சீவுன சிம்பு கணக்கா வர்றவன் போறவனையெல்லாம் சும்மா பிரிச்சு மேய்ஞ்சுகிட்டு இருந்தே? இப்போ என்னடான்ன டி ராஜேந்தர் கணக்கா தாடியோட சீன் போடுறே என்ன விசயம்’ ன்னு கேட்டதுதான் பய கண்ணுல இருந்து சும்மா குத்தால அருவி கணக்கா லிட்டர் லிட்டரா கண்ணீர். அட பாவி என்னடா ஆச்சும் சொல்லித்தொலைன்னு கேட்டா

‘மாப்ளே நாலு நாளைக்கு முன்னால அவகிட்டே என் மனசை தொறந்துட்டேண்டா. அவ முடியாதுன்னு சொல்லி இருந்தா கூட பரவாயில்லை ! ஆனா அவ அந்த கோடிங் கோயானை விரும்பரதா சொல்லீட்டாடா என்னால தாங்க முடியலைடா. பய பாரேன் எப்பவுமே ஏதோ கோடிங் எழுதர மாதிரியே ‘சீனை ‘போட்டுகிட்டு இருந்துட்டு ‘கேப்‘புல கெடா வெட்டீட்டாண்டா ! ஏண்டி எங்கூட தானே சிரிச்சு சிரிச்சு பேசுனே அவன்ந்தான் சரியான உம்மணா மூஞ்சின்னு சொல்லுவியேடின்னு கேட்டா அவர் அப்படி இல்லைடான்னு எவ்ளோ கிரேட்ன்னு சொல்லறாடா. பாருடா அந்த நாயி ‘அவர்‘ ஆய்ட்டாரு. அந்தப் பன்னி என்ன பண்ணிக் கவுத்தானோ? இதைய கூட தாங்கிடேண்டா ! ஆனா கடைசியா சொல்லறா ‘டேய் உன்னைய பார்த்தா செத்துப் போன என் அண்ணன் மாதிரியே இருக்கே‘ன்னு சொன்னா பாரு ! அதுக்கு மேல என்ன பண்றதுன்னே தெரியலைடா.

நீங்க சொல்லற மொக்கை ஜோக்குக்கெல்லாம் சும்மா கெக்கேபிக்கேன்னு இந்த பொண்ணுங்க சிரிக்குதுன்னு அதுக பின்னாடி காதல் காவடி எடுத்துகிட்டு போய்டாதீங்க மக்களே. உங்கள ஒரு வடிவேலு அண்ணன் மாதிரியோ இல்லை விவேக் தம்பி மாதிரியோ நெனச்சு இருக்கலாம் யாரு கண்டா? அப்படியே எப்ப பாரு மானிடரையே மொறைச்சு மொறைச்சு பார்த்துகிட்டு ‘பப்பரக்கா‘னு பேக்கு மாதிரி சீன் போட்டுகிட்டுபல மைனர் குஞ்சுக கண்ணாடியோட இருக்குதுக ! பார்த்து சூதானமா ‘லவ்‘வுங்கப்பூ !!

*- ஜொள்ளுபாண்டி*

## திரைக்கதை எப்படி இருக்க வேண்டும்?

ஒரு திரைப்படத்தின் கதை எப்படி இருக்க வேண்டும் என்று பலரிடம் கேட்ட போது அவர்கள் தங்கள் தொழிலுக்கேற்ற விதத்தில் அளித்த பதில்கள்

**டாக்டர்:**

‘கதையோட கரு கலையாம நிலைச்சு நின்னு முடியும்போது நறுக்னு மனசுல தச்ச மாதிரி இருக்கணும். முடிவு சிறப்பாக இருக்கணும்’

**லி:்ப்ட் ஆப்பரேட்டர்:**

‘கதை ஆரம்பிச்சதுலேர்ந்து முடியரவரைக்கும் ஜிவ்னு மேல மேல போய்கிட்டே இருக்கணும். இடையிலை நிக்கக் கூடாது.’

**குத்துச்சண்டை வீரர்:**

‘விறுவிறுப்பா தொடங்கி படிக்கறவங்களை திக்குமுக்காட வைச்சு நெத்தியடியா முடிக்கணும்.’

**குடிகாரர்:**

‘என்னதான் கதை அப்படி இப்படி போனாலும் அதன் மெயின் தீம் ஸ்டெடியா நிக்கணும். தள்ளாடக் கூடாது.

**பாத்திரக் கடைக்காரர்:**

‘கலகலன்னு கதை போய்கிட்டே இருந்து ஒவ்வொரு பாத்திரமும் பளிச் பளிச்னு மின்னிக் கொண்டே இருக்கணும்.’

**ஓவியர்:**

‘கதையோட நுனியும் முடிவும் என்னவென்றே தெரியாம வாசகர்களை குழப்பி அவரவர் எண்ணங்களுக்கு ஏற்ப புரிஞ்சுக்க விட்டுடணும்.’

**லாரி டிரைவர்:**

‘கதை ஸ்பீடா போய்க்கிட்டே இருந்தாலும் பல அதிரடி திருப்பங்கள் வந்துக்கிட்டே இருக்கணும்.’

**அரசியல்வாதி:**

‘எடுத்தோம் கவிழ்த்தோம்னு இல்லாம படிப்படியா இதயத்தில இடம்பிடிச்சு மனசை கொள்ளை கொள்ளணும்’

## கிருஷ்ணன் அவதாரத்தில் வந்த சந்தேகம்

ஆசிரியர் மாணவர்களுக்குக் கிருஷ்ண பகவானின் அவதார மகிமையைப் பற்றிய பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

‘கம்சனுடைய தங்கைக்கு எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை கம்சனைக் கொல்லும். இது விதி என அசரீரி கூறுகிறது. இதைக் கேட்டு ஆத்திரமடைந்த கம்சன் வாசுதேவனையும்இ தேவகியையும் ஒரு சிறையில் அடைக்கிறான்.

முதல் குழந்தை பிறக்கிறது. கம்சன் அதை விஷம் கொடுத்துக் கொல்கிறான். சிறிது காலம் கழித்து இரண்டாவது குழந்தை பிறக்கிறது. கம்சன் அதை மலை உச்சியிலிருந்து தூக்கிப்போட்டுக் கொன்றுவிடுகிறான். மேலும் சில காலம் கழித்து மூன்றாவது குழந்தை பிறக்கிறது. அதை...’ ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டே போக, ஒரு மாணவன் எழுந்து கேட்கிறான்.

‘சார் கிருஷ்ணாவதாரத்தில ஒரு சந்தேகம்’

‘என்னப்பா சந்தேகம்? கிருஷ்ணாவதாரத்தில் மொத்த இந்தியாவுக்கும் வராத சந்தேகம் உனக்கெப்படி வந்தது? சொல்லுப்பா’.

‘சார் ! தங்கைக்குப் பிறக்கப்போகும் எட்டாவது குழந்தைதான் கம்சனைக் கொல்லும் அப்படிங்கறது கம்சனுக்குத் தெரியும்தானே?’

‘ஆமா ! அதிலென்ன சந்தேகம்’?

‘அப்புறம் எதுக்கு சார் இந்த கம்சன் வாசுதேவனையும், தேவகியையும் ஒரே சிறைக்குள்ள அடைக்கிறான். அவனுக்கு வெவரம் பத்தாதோ?

*நன்றி : நிலாச்சாரல்*

## 2020 முக்கிய செய்திகள்

மல்லாக்கப் படுத்து வீட்டின் மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டிருந்த நான் கால எந்திரத்தில் 2020-க்குப் பயணித்தால் என்ன எனத் திடீரென்று தோன்றியது. மூளையைக் கசக்கி அங்கு பத்திரிகைகளில் நான் படித்த தலைப்புச் செய்திகளே இவை.

தேதி : 24.9.2020

ஸ்பைடர்மேன் பாகம் 15 இன்று வெளியீடு

ஆஸ்திரேலியா எட்டாவது முறையாக உலகக்கோப்பையைக் கைப்பற்றியது.

ஐஸ்வர்யாராயின் ஏழாவது திருமணம் - சல்மான், விவேக், அபிஷேக் பங்கேற்பு

சன் டிவியில் ‘கோலங்கள்’ 4,450 வது பாகத்தைத் தொட்டது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கங்குலி தன் பதவியை ராஜினாமா செய்தார்.

திரிஷாவினுடைய இளைய மகள் ரஜினியின் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். படத்தின் பெயர் எம்.ஜி.ஆர்.

எட்டாவது முறையாக முதல்வராகப் பதவியேற்றார் 95 வயதாகும் கலைஞர் கருணாநிதி.

நடிகர் தனுஷுக்கும், இயக்குனர் சூர்யாவுக்கும் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது தனியார் பல்கலைக்கழகம்.

காஷ்மீர் பிரச்சினையில் விரைவில் சுமூகத் தீர்வு காணப்படும் - பிரதமர் ராகுல் காந்தி அறிக்கை.

சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாகத் தெரிவித்தார். ஆனால் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவார்.

பின்லேடன் சுற்றி வளைக்கப்பட்டான் - அமெரிக்கா அறிவிப்பு

ஓசோன் படலம் தடவப்பட்ட குடைகள் அமோக விற்பனை. இக்குடைகள் விற்பனையில் ரிலையன்ஸ் முன்னிலை.

பிரேமானந்தாவின் அப்பீல் மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி அவர் நிரபராதி எனக் கூறி விடுவித்தார்.

*- ரிசிக் குமார்*



குடும்ப பாரம் குடும்ப பாரம் எண்டு சொல்லுறாங்களே? அது இதுதானா?